# IN THE COURT OF THE ADDITIONAL ASSISTANT SUBORDINATE COURT, HOSUR

**Date : 18.09.2025**

**SC. 202/2022**

**அ.சா 11 – கிருஷ்ணன்**

2025 ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 18 ம் நாள் **கிருஷ்ணன்** என்பவரின் சாட்சியாக விசாரரிக்கப்படுபவர் 1969 ம் ஆண்டு 54 வது சட்டப்பிரிவு (2) ஏற்பாட்டின் படி திரு கிருஷ்ணமூர்த்தி தலைமை எழுத்தர் அவர்களால் ஆணையிட்டு உறுதி வழங்கப்படுகிறது .

| | | | |
|---|---|---|---|
| பெயர் | **கிருஷ்ணன்** | தந்தை பெயர் | முனியப்பன் |
| வயது | 36 | கிராமம் | ஆருப்பள்ளி |
| வட்டம் | சூளகிரி | மாவட்டம் | கிருஷ்ணகிரி |

**( எதிரிகள் ஆஜர் எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர் )**

**முதல் விசாரணை : –**

நான் தற்போது ஆருப்பள்ளியில் வசித்து வருகிறேன். நான் மேஸ்திரி வேலை செய்து வருகிறேன். 2016 ம் ஆண்டு சின்னத்தம்பிக்கும் செல்வத்திற்கும் பணம் கொடுக்கல் வாங்கலில் , சின்னத்தம்பியை செல்வம் கொன்றுவிட்டார். முன்விரோதம் காரணமாக 11.02.2020 ம் தேதி கார்த்திக் என்பவர் செல்வனின் அண்ணன் சீனிவாசன் என்பவரை இரவு 8.00 மணிக்கு வெட்டியதாக சொன்னார். நான் சம்பவ இடம் சென்றேன். அப்போது அங்கு சீனிவாசன் இல்லை, , அவரை மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள். நாங்கள் சென்று அரசு மருத்துவமனையில் பார்த்தோம் பின்பு 2 நாள்கள் கழித்து பால்ராஜ் என்பவரை போலிசார் கைது செய்தார்கள். எங்களையும் அழைத்து அதன்பின்பு எங்களை எல்லோரையும் விசாரித்தார்கள். விசாரணையில் நாங்கள் போலிசாரிடம் 1. சக்திவேல் 2. பால்ராஜ் 3. சகாதேவன் ஆகிய மூவரும் நகையை மீட்பதற்காக கிருஷ்ணகிரிக்கு சென்றோம் என போலிசாரிடம் தெரிவித்தோம் , அது போலவே, விசாரணையில் சுங்கச்சாவடியில் உள்ள CCTV ஐ பார்த்த போது

சம்பவம் நடந்த போது பால்ராஜ் , அங்கு இல்லை என்பதை போலிசார் நடந்து கொண்டார்கள். சுங்கச்சாவடியில் அவர்கள் வாகனம் கடந்து செல்லும் நேரம் இரவு 9.00 மணி ஆகும். அதன் பின்பு விசாரணையில் பால்ராஜ்க்கும் இந்த வழக்கிற்கு எந்த சம்மந்தமும் இல்லை என்று காவல் அதிகாரிகள் தெரிந்து கொண்டு என்னிடமும் விசாரித்து வாக்குமூலம் பெற்று கொண்டார். என்னையும் போலிசார் அழைத்து கொண்டு நகை கடையிலும்  நான்கு வழிச்சாலை சோதனை சாவடியிலும்  உள்ள  CCTV பதிவையும்  போலிசார் ஆய்வு செய்தார்கள். பின்னர் போலிசார் ஏற்கனவே கைது செய்து வைத்திருந்த பால்ராஜை விடுவித்தார்கள்.  போலிசார் என்னை விசாரித்து எழுதி கொண்டார்கள்.

<u>**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :**</u>

இந்த வழக்கின் சம்பவத்தை நான் நேரில் பார்க்கவில்லை என்றால் சரிதான். பஜாஜ் பல்சர் வாகனம் பற்றி எனக்கு தெரியாது. நகைக்கடையிலும் , நான்கு வழி சாலை சோதனை சாவடியிலும் ,  CCTV Camer வில் பதிவாகி இருந்த பதிவுகளையும் போலிசார் எடுத்து வந்தார்கள். அதன் பின்பு போலிசார் என்னை விசாரிக்கவில்லை என்றால் சரிதான்.

Taken down by me in Open Court and interpreted and read over to the Witness and acknowledged by him/her to be correct.

Additional Assistant Subordinate Judge,
Hosur

## IN THE COURT OF THE ADDITIONAL ASSISTANT SUBORDINATE COURT, HOSUR

**Date : 18.09.2025**

**SC. 202/2022**

**அ.சா 10 – சக்திவேல்**

2025 ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 18 ம் நாள் **சக்திவேல்** என்பவரின் சாட்சியாக விசாரரிக்கப்படுபவர் 1969 ம் ஆண்டு 54 வது சட்டப்பிரிவு (2) ஏற்பாட்டின் படி திரு கிருஷ்ணமூர்த்தி தலைமை எழுத்தர் அவர்களால் ஆணையிட்டு உறுதி வழங்கப்படுகிறது .

| | | | |
|---|---|---|---|
| பெயர் | **சக்திவேல்** | தந்தை பெயர் | கிருஷ்ணன் |
| வயது | 27 | கிராமம் | ஆருப்பள்ளி |
| வட்டம் | **சூளகிரி** | மாவட்டம் | கிருஷ்ணகிரி |

**( எதிரிகள் ஆஜர் எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர் )**

**முதல் விசாரணை : –**

நான் தற்போது ஆருப்பள்ளியில் வசித்து வருகிறேன். நான் மேஸ்திரி வேலை செய்து வருகிறேன். 2016 ம் ஆண்டு சின்னத்தம்பி என்பவரை செல்வம் என்பவர் கொன்றுவிட்டார். முன்விரோதத்தின் காரணமாக 11.02.2020 ம் தேதி அன்று மாலை 8.00 மணிக்கு கார்த்திக் என்பவர் சீனிவாசன் என்பவரை கொலை செய்ய முயற்சி செய்தார். இது சம்மந்தமாக சீனிவாசன் என்பவர் பால்ராஜ் மீது வழக்கை தாக்கல் செய்தார். அந்த சமயம் நானும், பால்ராஜ் மற்றும் சகாதேவன் ஆகியோர்கள் கிருஷ்ணகிரி சென்று நகையை மீட்டு வந்தோம். 2 நாள்கள் கழித்து 13.02.2020 ம் தேதி சூளகிரி காவல் ஆய்வாளர் எங்களை அழைத்து சென்று விசாரித்தார். போலிசார் விசாரணையில் நாங்கள் சம்பவம் நடந்த அன்று சம்பவ இடத்தில் இல்லை என்றும் , நகையை மீட்டு வருவதற்காக கிருஷ்ணகிரி சென்றிருந்தோம் என்று போலிசாரிடம் தெரிவித்தோம். போலிசார் CCTV ஐ பார்த்து நாங்கள் இரவு 9.00 மணியளவில் கிருஷ்ணகிரியில் இருந்து வந்தோம் என்று உறுதி செய்துகொண்டார்கள். மீண்டும் போலிசார் என்னை

விசாரிக்கவில்லை.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

சம்பவ நேரத்தில் நாங்கள் கிருஷ்ணகிரியில் இருந்ததால் சம்பவம் எங்கு எப்படி நடந்தது என்று எனக்கு நேரில் தெரியாது என்றால் சரிதான். என்னை போலிசார் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார்கள்.

Taken down by me in Open Court and interpreted and read over to the Witness and acknowledged by him/her to be correct.

Additional Assistant Subordinate Judge,
Hosur